[20th April 1959.

THE HON. SRI M. A. MANICKAVELU : 1949-முதல் 1958-வரையில் ஹரிஜனங்களுக்கு கொடுத்த நிலம் சுமார் 33 ஆயிரம் ஏக்கர், நிலமில்லாதவர்களுக்கு என்று சுமார் 58 ஆயிரம் ஏக்கர் நிலம், சிவாஜிநாமா-நிலக்காரர்களுக்கு சுமார் 34 ஆயிரம் ஏக்கர். எக்ஸ்-சர்வீஸ்காரர்களுக்கு சுமார் 3,000 ஏக்கர் இவ்விதம் பல ஏக்கர் நிலங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

MR. SPEAKER : I have got five more questions and three more minutes. I shall finish them in three minutes.

Level-crossing gate in Tirunelveli town

*26 *Q*.—Sri M. S. SELVARAJAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருநெல்வேலி டவுன், ஸ்ரீநெல்லையப்பர் ஹைரோடில் உள்ள ரயில்வே கேட்டினால் பொதுஜனப் போக்குவரத்துக்கு இடையூறு உள்ளதாகவும் அதை நிவர்த்திக்கக் கோரியும் தகவல் வந்துள்ளதா ?

(ஆ) அதற்கான திட்டம் ஒன்றைப் பரிசீலிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) Yes, Sir.

Sri M. S. SELVARAJAN : இவ்விதம் வாகனங்கள் போக்குவரத்திற்கு மேம்பாலம் போடுவதற்கு காலதாமதம் ஆகும் என்றால், அதுவரையில் ஜனங்கள் போவதற்கு கீழே அல்லது மேலே புதிய பாதை அமைத்துக்கொடுப்பதற்கு முன் பாத்தியதை வழங்க சிபாரிசு செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதை செய்வதற்கும் ரயில்வே நிர்வாகத்தோடு கலந்துகொண்டு தான் செய்யவேண்டும்.

Audio-Visual education

*27 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of secondary schools where audio-visual education is imparted through audio-visual equipment such as cinema projectors and radio sets; and

(*b*) how far the scheme is successful :

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) A statement [a] is placed on the table of the House.

SRI N. K. PALANISAMI : பல பள்ளிக்கூடங்களில் போதுமான பணவசதியில்லாத காரணத்தால் இம்மாதிரியான கருவிகள் வாங்குவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே சர்க்காரே இந்த கருவிகளை எல்லாம் கன்செஷன் ரேட்டில் வாங்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு என்று தனியாகச் சில இடங்களில் நிதி இருக்கிறது. அதிலிருந்து ரேடியோக்கள், பிலிம் பிரொஜக்டர்கள், முதலியவைகள் வாங்குவதற்கு முயற்சி எடுத்து வருகிறார்கள்.

---

[a] Printed as Appendix VIII on page 51 infra.